## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் –

# தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சார்பில் பணி நியமன ஆணைகள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## ரூ.60,85 கோடி செலவில் செயல்முறைக் கிடங்குகள் – நவீன நெல் சேமிப்பு வளாகங்களைத் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக.24-**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் ரூ.60.85 கோடி செலவில் 5 வட்ட செயல்முறை கிடங்குகள், 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் 2 நவீன சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றைத் திறந்து வைத்து,**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.08.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 23.27 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வட்ட செயல்முறைக் கிடங்குகள், 30.38 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் 7.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு நவீன கிடங்குகள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

மேலும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பணியாளர்களாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 63 நபர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் 55 வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களைச் சேமித்து வைத்திடும் நோக்குடன் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை நவீன முறையில் சேமித்து வைத்திடவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினை வட்ட அளவில் உறுதி செய்யவும், பொதுவிநியோகத் திட்டத்தின் பயன்பாட்டிற்கான தானியங்களின் சேமிப்பிற்கான கொள்ளளவினை அதிகப்படுத்தும் விதமாகவும், அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், ஆத்துக்குறிச்சியில் 4.02 கோடி ரூபாய் செலவில் 2000 மெ.டன் கொள்ளளவிலும், மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், மேலக்குயில்குடியில் 4.50 கோடி ரூபாய் செலவில் 2500 மெ.டன் கொள்ளளவிலும் உசிலம்பட்டி வட்டம், சீமானுத்துவில் 5.50 கோடி ரூபாய் செலவில் 3000 மெ.டன் கொள்ளளவிலும், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கங்கர்செவலில் 3.75 கோடி ரூபாய் செலவில் 2000 மெ.டன் கொள்ளளவிலும், காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், கீழ்ப்புத்தூரில் 5.50 கோடி ரூபாய் செலவில் 3000 மெ.டன் கொள்ளளவிலும், என மொத்தம் 23.27 கோடி ரூபாய் செலவில் மொத்தம் 12.500 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள 5 வட்ட செயல்முறை கிடங்குகள்;

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், திருவாதவூரில் 14.42 கோடி ரூபாய் செலவில் 15,000 மெ.டன் கொள்ளளவிலும், வாடிப்பட்டி வட்டம் குல சேகரன்பேட்டையில் 6.73 கோடி ரூபாய் செலவில் 7000 மெ.டன் கொள்ளளவிலும், கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், டி.புடையூரில்

9.23 கோடி ரூபாய் செலவில் 9500 மெ.டன் கொள்ளளவிலும், என மொத்தம் 30.38 கோடி ரூபாய் செலவில் 31,500 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள்;

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட குனிச்சி கிராமத்தில் 3.60 கோடி ரூபாய் செலவில் 3400 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள ஒரு நவீன சேமிப்புக் கிடங்கு, அரியலூர் மாவட்டம் - அரியலூர் வட்டம், தேளூர் கிராமத்தில் 3.60 கோடி ரூபாய் செலவில் 3400 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள ஒரு நவீன சேமிப்புக் கிடங்கு;

- என மொத்தம் 60 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வட்ட செயல்முறை கிடங்குகள், 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் 2 நவீன சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் / உதவி சேமிப்புக் கிடங்கு மேலாளர் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 63 நபர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் 55 வாரிசுதாரர்களுக்கு பட்டியல் எழுத்தர், அலுவலக உதவியாளர் / எடையாளர் / காவலர் ஆகிய பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அ. ஜான் லூயிஸ் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர். ஜெ. விஜயா ராணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.08.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 23.27 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வட்ட செயல்முறை கிடங்குகள், 30.38 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் 7.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு நவீன கிடங்குகள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர்.ப.ரங்கநாதன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதா சாகு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அ. ஜான் லூயிஸ் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர். ஜெ. விஜயா ராணி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### சென்னை – கோவை – கன்னியாகுமரி மாவட்டங்களில் விளையாட்டு விடுதி – சிறு விளையாட்டரங்கம்!

# ரூ.10.89 கோடியில் விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்புப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

*சென்னை, ஆக. 24-*

*சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதி, புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், புதிதாக கட்டப்பட உள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.*

*சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் புதிய விளையாட்டு விடுதி, புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், புதிதாக கட்டப்பட உள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2025) அடிக்கல் நாட்டினார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல். உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், மாவட்ட விளையாட்டரங்கங்களில் சர்வதேச தரத்திலான விளையாட்டு வசதிகளை ஏற்படுத்துதல், முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் உள்ளிட்ட விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை புதிதாக உருவாக்குதல், சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.*

*அதனடிப்படையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2025-2026 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத்தொடரில், சென்னை, கோபாலபுரத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி வளாகத்தில் புதிய விளையாட்டு விடுதி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர்கள் மாடம் புதுப்பிக்கப்படும் என்று அறிவித்தார்.*

*கோபாலபுரம் கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 மாணவர்கள் தங்கி குத்துச்சண்டை பயிற்சி பெறும் வகையில் புதிய விளையாட்டு விடுதி, உணவருந்தும் கூடம், சமையலறை, பயிற்சி மேற்கொள்ளும் பகுதி ஆகிய வசதிகளுடன் கட்டப்பட உள்ளது.*

*கோயம்புத்தூர் மாவட்டம், நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர்கள் மாடம் 4.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து, புதுப்பிக்கப்பட உள்ளது.*

*மேலும், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 200 மீ தடகள (மண்) பாதை, கையுந்து பந்து, கபாடி, கூடைப்பந்து, இறகுப்பந்து, கோ-கோ ஆடுகளங்கள், நீளம் தாண்டுதல் பகுதி ஆகிய விளையாட்டு வசதிகள் மற்றும் நுழைவு வாயில், நிர்வாக அலுவலக கட்டடம், கழிப்பறை வசதி ஆகிய வசதிகளுடன் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் கட்டப்பட உள்ளது.*

*தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் சென்னை கோபாலபுரத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி வளாகத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள விளையாட்டு விடுதி, கோயம்புத்தூர் மாவட்டம் நேரு விளையாட்டு வளாகத்தில் 4.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட உள்ள பார்வையாளர் மாடம், கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட உள்ள சிறு விளையாட்டு அரங்கம் என மொத்தம் 10.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு மேம்பாட்டு உள்கட்டமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.*

*இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். நா.எழிலன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் கலந்துகொண்டனர்.*

---

### ஜப்பான் வாழ் எழுத்தாளர் – தி.மு.க. அயலக அணி நிர்வாகி ச.கமலக்கண்ணன் எழுதிய

# ‘ஜப்பானிய பழங்குறுநூறு’ இலக்கிய உரை நூல் அறிமுக விழா!

## முனைவர் ய.மணிகண்டன் தலைமை! முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் நூல் அறிமுக உரை!

*சென்னை, ஆக. 24-*

*ஜப்பான்வாழ் எழுத்தாளரும் ஜப்பான் தி.மு.க. அயலக அணி நிர்வாகியுமான ச.கமலக்கண்ணன் “ஜப்பானியப் பழங்குறுநூறு” என்னும் பெயரில் ஜப்பானிய இலக்கியத்துக்கு எழுதிய உரைநூலின் அறிமுகவிழா சென்னை கவிக்கோ அரங்கில் 17 ஆகஸ்ட் அன்று மாலை நடைபெற்றது.*

*மக்கள் சிந்தனைப் பேரவையின் சென்னைக் கிளை ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் பேரவையின் செயலாளர் ந. அன்பரசு வரவேற்புரை நல்கினார். சென்னைப் பல்கலையின் தமிழ்மொழித் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ய. மணிகண்டன் தலைமை வகிக்க, சொற்பொழிவாளர் முனைவர் பாரதி கிருஷ்ணகுமார் நூலை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். இருவரின் உரைகளிலும் நூலின் சிறப்புகளும் சுவையான பகுதிகளும் எடுத்துரைக்கப்பட்டன.*

*மூன்றரை ஆண்டுகால உழைப்பில் விளைந்த இந்நூலுக்கு வித்திட்ட மருத்துவர் இரா. கலைக்கோவன் அவர்களுக்கும் நூலைப் பதிப்பிக்க உதவிய த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கும் நன்றிகூறி உரையைத் தொடங்கிய நூலாசிரியர் ச.கமலக்கண்ணன், நூலின் உள்ளடக்கத்தை விளக்கியும் பழங்குறுநூறு இலக்கியத்தை அறிமுகப்படுத்தியும் ஏற்புரையை நிறைவு செய்தார்.*

*பேராசிரியர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், நீதியரசர் ஜியாவுதீன், வழக்கறிஞர் காந்தி பாலசுப்ரமணியம், எழுத்தாளர் கோவி லெனின், பேராசிரியர் முனைவர் நெல்லை சுப்பையா, எழுத்தாளர் விஷ்ணுபுரம் சரவணன், இலக்கிய ஆர்வலர் திருமதி. ரேகா நாயர், இதய அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் சிவமுத்துக்குமார் உள்ளிட்ட புகழ் பெற்றவர்கள் பங்கேற்ற இந்நிகழ்வை செல்வி பவித்ரா பாலசுப்ரமணியன் தொகுத்து வழங்கினார்.*

---

# ‘தி.மு.க.75’ நூல் குழுவினருடன்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை!






கழக இளைஞர் அணி தமிழ்நாடு முழுவதும் நிர்வாகிகள் நியமனம், அறிமுகக்கூட்டங்கள் போன்ற அரசியல் பணிகளை ஆற்றுவதுடன் சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர் நூலகங்கள் அமைப்பது, இளம் பேச்சாளர்களுக்குப் பயிற்சியளித்து கூட்டங்களில் பேச வைப்பது, முரசொலி பாசறைப்பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், கலைஞர் மாணவப்பத்திரிகையாளர் திட்டம், இளம் ஆய்வாளர்களுக்கான கலைஞர் நிதி நல்கை திட்டம் போன்ற கருத்தியல் பணிகளையும் முன்னெடுத்து வருகிறது.

இளைஞர் அணியின் கருத்தியல் சார்ந்த பணிகளின் அடுத்தகட்ட முன்னெடுப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் அரசியல் - சமூகம் - பொருளாதாரம் - பண்பாட்டுத் தளங்களில் கழகம் ஏற்படுத்திய தாக்கம் குறித்த தி.மு.க. 75 கட்டுரைத் தொகுப்பு, நம் கழக இளைஞர் அணியின் ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ மூலம் வெளிவரவிருக்கிறது.

கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலோசனைக்குழுவில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் ப.திருமாவேலன், மூத்த பத்திரிகையாளர் விஜயசங்கர் ராமச்சந்திரன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி லெனின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் முக்கியமான எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், சமூக, அரசியல் இயக்கத் தலைவர்களின் முக்கியமான கட்டுரைகளைத் தாங்கி வெளிவரவிருக்கும் இந்தக் கட்டுரைத் தொகுப்பு ஒரு முக்கியமான வரலாற்று ஆவணமாக அமையும்.

இந்தக் கட்டுரைத்தொகுப்பின் உள்ளடக்கம், வடிவமைப்பு பணிகள் குறித்து ஆலோசனைக்குழு மற்றும் ஆசிரியர் குழுவுடன் கழக இளைஞர் அணிச்செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.08.2025 அன்று சென்னை குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.